**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**

**அசல் வழக்கு எண். 28/2025**

**பி.வா.சா.1 – சாதிக் அலி**

**24–11–2025 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 6ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. பிரமாணவாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் யார் சொல்லி தாயார் செய்யப்பட்டது என்றால் வழக்கறிஞர் சொல்லி தாயார் செய்யப்பட்டது. அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். வாதி எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் பாகப்பிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தில் நானோ வாதியோ குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல, குடியிருக்கிறோம். அதற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆவணம் இல்லை. நான் எனது பிரமாணவாக்குமூலத்தில் சொத்தியுள்ள முகவரி தாவா சொத்தின் முகவரி அல்ல என்றால் சரிதான். பிரமாணவாக்குமூலத்தில் உள்ள முகவரியில் தான் நான் குடியிருக்கிறேன் என்றால் சரிதான்.

2. வாதிகள் பெயரிலோ, 1 முதல் 4 பிரதிவாதிகள் பெயரிலோ தாவா சொத்திற்கான வீட்டு வரி, குடிநீர் வரி, மின் கட்டண வரி ஆகியவற்றை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்யவில்லை வாதி தாக்கல் செய்துள்ளார். நானும் 1 முதல் 4 பிரதிவாதிகளும் வாதியும் சேர்ந்து தனிதனியா வழக்கறிஞர் வைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். 15.09.2025ம் தேதி யார் சென்று பாகப்பிரிவினையை கேட்டார் என்றால் எனது அக்கா சிராஜுனிசா சென்று கேட்டார். வாதி கேட்டாரா என்ற விபரம் எனக்கு தெரியாது. 6ம் பிரதிவாதியிடம் நான் பாகம் கேட்க்காததால் என்னை பொறுத்து வழக்கு தள்ளுபடியாகவேண்டும் என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே பாகம் கேட்டுள்ளேன்.

3. 6ம் பிரதிவாதி வாதிக்கும், 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் உண்டான திருமண சீர் வரிசைகள் அனைத்தும் செய்து திருமணம் செய்துவைத்து பார்த்துவந்துள்ளார் என்றால் சரியல்ல. 22.02.2012ல் எனது தகப்பனார் இறந்துவிட்டார். எனது தாயார் பாத்திமா பீவீ 2008ல் இறந்துவிட்டார். 2008 முதல் 2012 வரை சுமார் 23 ஆண்டுகளாக பாகப்பிரிவினை கேட்டு நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல, நேரில் சென்று கேட்டுள்ளேன். 23 ஆண்டுகலாக 6ம் பிரதிவாதி தாவா சொத்தில் குடியிருந்து அனுபவித்து வருகிறார் என்றால் தாவா சொத்தின் ஒரு பகுதியில் 6ம் பிரதிவாதி உள்ளார். மற்ற பகுதி காலி இடமாக உள்ளதா என்றால் எங்களது பொருட்கள் அங்கு உள்ளது, எனது அக்கா மும்தாஜ் மற்றும் தங்கை ஐசாமா இருந்தார்கள். 2 ஆண்டுகாலக வீடு பழுதடைந்துள்ளதால் தற்போது அங்கு இல்லை. சம்சாத் பேகமும் அங்குதான் இருந்தார்.

4. சம்சாத் பேகம் 63, எம்.எஸ்.ஆர் லைன், நொய்யல் வீதியில் குடியிருக்கிறார். அவரது முகவரியாகும். ஐசம்மாள் முகவரி 63, எம். எஸ்.ஆர் லைன், நொய்யல் வீதியில் குடியிருக்கிறார். எம்.எஸ்.ஆர் வீதியும், மமுசா வீதியும் வெவ்வேறு என்றால் சரியல்ல இரண்டும் ஒன்றுதான். தாவா சொத்தில் சம்சாம் பேகமும் ஐசம்மாளும் குடியிருப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் வீட்டு வரி ரசீது, தண்ணீர் வரி ரசீது கொடுத்துள்ளேன். அது யார் பெயரில் உள்ளது என்றால் சம்சாத் பேகம் பெயரில் உள்ளது. அவர்கள் பெயரில் உள்ள ஆவணங்களை நான் தாக்கல் செய்ய தயராக உள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் ஏற்கனவே நானும் எனது சகோதரிகளும் 6ம் பிரதிவாதி சீர் வரிசை செய்ததால் வாய்மொழியா எந்த பாகமும் வேண்டாம் என்று கூறிவிட்டோம் என்றும் 6ம் பிரதிவாதி 25 ஆண்டுகளாக தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல.

5. தற்போது நான் மங்கலத்தில் பள்ளிவாசல் வீதியில் குடியிருக்கிறேன் என்றால் சரிதான். எனது வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அடையாள அட்டை பள்ளிவாசல் வீதியில் உள்ளது என்றால் மங்கலத்திற்கு பக்கத்தில் வடுகன்பாளையத்தில் உள்ளது. வாக்காளர் அடையாள அட்டை எம்.எஸ்.ஆர் நகரில் தான் உள்ளது. எனது ஆதார் அடையாள அட்டையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தாயாராக உள்ளேன் என்றால் சரிதான். **எனது ஆதார் அடையாள அட்டை அசலோடு ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது. பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது.** தாவா சொத்தில் எனக்கு 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு மற்றும் வாதிக்கு பங்கு இல்லை என்றால் சரியல்ல. வாதிக்கு ஆதரவாக பொய் சாட்டிசியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 6 ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு தள்ளுபடியாகவேண்டும் என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

(வாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை)

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2025.11.24 15:11:28 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.